# மேட்டுப்பாளையம் நகராட்சி

31.08.2021ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

<table>
<tr><td>1</td><td>
இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகளில் ஏலம் போகாமல் உள்ள 55 கடைகளுக்கு 18.08.2021ல் நடைபெற்ற ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில், பேருந்து நிலையத்தில் உள்ள எம்.யு.டி.எப் மேல்மாடி கடை எண்1 ற்கு கீழ்க்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஏலக்கேள்விகள் கோரப்பட்டது.<br><br>
<table>
<tr><th></th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை மாதவாடகை</th><th>ஏலக்கேள்வி தொகை மாத வாடகை</th></tr>
<tr><td>1. திரு.அப்துல்ரஜாக்<br>த/பெ.எஸ்.எம்.அயூப்,<br>29/14 D9, ஜெகநாதன் லே அவுட்,<br>காட்டூர், மேட்டுப்பாளையம்.</td><td>ரூ.5750/–</td><td>ரூ.6200/–, ரூ.6500/–</td></tr>
<tr><td>2. திரு.பாலசுப்ரமணியன்,<br>த/பெ.பாலகிருஷ்ணன்,<br>21E, கிருஷ்ணசாமி லே அவுட்,<br>மகாதேவபுரம்,<br>மேட்டுப்பாளையம்.</td><td>ரூ.5500/–</td><td>ரூ.6100/–, ரூ.6300/–</td></tr>
</table>
<br>
மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற ஏலக்கேள்விகளில் திரு.அப்துல்ரஜாக் என்பவரது ஏலக்கேள்வி தொகையானது சீராய்வுக்குழு நிர்ணயம் செய்த ரூ.6075/– ஐ விட கூடுதலாக உள்ளதால், பேருந்து நிலைய எம்.யு.டி.எப் மேல்மாடி கடைஎண்.1ஐ திரு.அப்துல்ரஜாக் என்பவருக்கு ஒப்படைப்பு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.780/2016/அ1
</td></tr>
<tr><td>2</td><td>
மேட்டுப்பாளையம் நகராட்சியில் தூய்மைப்பணியாளர்கள் பணி நியமனம் சம்பந்தமாக திருமதி.எம்.பத்மினி என்பவர் (1) மாநில தகவல் ஆணையம் (2) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் மற்றும் (3) பொது தகவல் அலுவலர் மேட்டுப்பாளையம் ஆகியோரை பிரதிவாதிகளாக சேர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண்.WP 19872/2020. எனவே, மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக எதிர்வாதுரையாடிய திரு.பி.ஆனந்த் உயர்நீதி மன்ற அரசு வழக்கறிஞர்க்கு வழக்கு கட்டணமாக ரூ.15,000/– வழங்க செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.35/2021/எச்1
</td></tr>
<tr><td>3</td><td>
மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா தினசரி மார்க்கெட் அருகில் உள்ள கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. இங்கு தினசரி அதிக அளவில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கூடுவதால் இக்கழிப்பிடத்தை பயன்படுத்த முடியாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். இக்கழிப்பிடத்திற்கு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்படடு பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.1846/2021/இ1
</td></tr>
</table>

<table>
<tr><td>4</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.4ல் உள்ள MRD ஷெரீப் நகர் பகுதியில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்துள்ளது.இதனால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. இப்பகுதியில் ஒரு சிறுபாலம் அமைப்பதற்கு ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>5</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8, முனிசிபல் காலனி, மகாஜன பள்ளி அருகே உள்ள ஆணையாளர் குடியிருப்பில் மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.2.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.1846/2020/இ1</td></tr>
<tr><td>6</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30, கோ–ஆப்ரேடிவ் காலனியில், தமிழ்நாடு மின்சார வாரியம் அலுவலகம் முன் உள்ள சிறுபாலம் (Culvert) பழுதடைந்து மிகவும் மோசமாக உள்ளது. எனவே, அவ்விடத்தில் புதிய சிறுபாலம் அமைக்க ஆகும் செலவினம் ரூ.1.00இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1846/2020/இ1</td></tr>
<tr><td>7</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, அண்ணா நகர் நகராட்சி பள்ளி வளாகத்தில் வகுப்பறைகளின் முன்பகுதி மற்றும் அமர்ந்து உண்ண அமைக்கப்பட்ட shed ன் தரைதளத்தில் Paverblock அமைக்க ஆகும் செலவினம் ரூ.1.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1847/2020/இ1</td></tr>
<tr><td>8</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி 2020 – 2021ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 26.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண் .</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ இலட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு விழுக்காடு %</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">தலைமை நீரேற்று நிலையத்திற்கு தேவையான குளோரின் வாயு சிலிண்டரில் நிரப்புதல்</td><td rowspan="2">ரூ.4,85,000/–</td><td>M/s Alchem Industries</td><td>ரூ.4,84,518/– மதிப்பீட்டிற்கு குறைவு</td></tr>
<tr><td>M/s General Marketing Enterprise</td><td>ரூ.4,92,750/– மதிப்பீட்டிற்கு அதிகம்</td></tr>
</table>
மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் M/s Alchem Industries அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1208/2020/இ1</td></tr>
</table>

| | |
|---|---|
| 9 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1ல் உள்ள தண்ணீர்துறை வீதியில் உள்ள பெண்கள் பொது கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் பெண்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இக்கழிப்பிடத்திற்கு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1993/2021/இ1 |
| 10 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் ஆதரவற்றோர் மற்றும் மனநல பாதிக்கப்பட்டோரை கொரோனா நோய் தொற்றில் இருந்து காக்க பாதுகாப்பாக தங்க வைப்பட்டுள்ளனர். மேற்படி நகராட்சி கட்டிடத்தில் மனநல பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பை கருதி Grill அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1312/2021/இ1 |
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அரசாணை எண். 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை, நாள் 30.04.1997ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 2902/பி3/2016 நாள் : 24.02.2016 மற்றும் 18.07.2016ன் படியும் முறையே 61 மற்றும் 90 பணியாளர்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட செயல்முறைகளில் 01.07.2019 வரை நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேலும் 3 ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.எண். எச்1/6219/2016 நாள் 21.01.2019ன் படி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டதில் சில கூடுதல் விபரங்களுடன் மீண்டும் இவ்வலுவலக ந.க.எண். எச்1/494/2019 நாள் 10.02.2021ல் மீண்டும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும், சுகாதாரப் பணிகள், பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதார அவசர அவசியத்தை கருதி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி இந்நகராட்சியில் தற்போது தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர் எஸ்.எஸ். இஞ்சினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு 31.08.2021 வரை பணிகள் மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்…… நாள் 01.08.2021 முதல் 31.08.2021 முடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. இவர்கள் மேலும் 01.09.2021 முதல் 30.09.2021 வரை ஒரு மாதங்களுக்கு தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 12 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN40B 1497க்கு தகுதிச் சான்று பெரும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ. 2,50,000க்கு/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம். |

| | |
|---|---|
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் தூய்மைப் பணியாளர்கள் நியமனம் சம்பந்தமாக 1.பத்மினி, 2.லட்சுமி, 3.ஆர்.மாரி, 4.என்.சங்கர் நால்வரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.A SR NO 11194/2018 CMP NO 12216/2021 வாயிலாக நகராட்சிகள் நிர்வாக ஆணையாளரை முதல் பிரதிவாதியாகவும் நகராட்சி ஆணையாளர் மேட்டுப்பாளையத்தை இரண்டாவது பிரதிவாதியாகவும் சேர்த்து 1998 மற்றும் 1999 ஆண்டு கால கட்டத்தில் நியமனங்கள் செய்யப்பட்டதில் தங்களை நியமனம் செய்யப்படவில்லை என வழக்கு தொடர்ந்துள்ளார்.<br>எனவே, மேற்படி வழக்கினை நகராட்சிக்கு சார்பாக எதிர்வாதுரையாட திரு.P.ஆனந்த் உயர்நீதி மன்ற வழக்கறிஞரை கேட்டுக்கொள்ளவும் அதற்கான வக்காலத்து நமூனாவில் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கவும் இவ்வழக்கு சம்பந்தமாக உத்தேச செலவினமாக ரூ.20,000 த்தினை செலவிடவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4345/2011/எச்1 |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் கூட்டு குடிநீர்த்திட்டத்தில் ஆற்று நீரை (Raw Water) நீரேற்றம் செய்யும் இரண்டு 25HP பம்பு செட்டுகள் மாறி மாறி இயங்கி வருகின்றன.இதில் யூனிட் எண்.1 கடந்த 02.08.2021 அன்று இயங்கிக் கொண்டிருந்த போது அதிக இரைச்சலுடன் நின்று விட்டது. பம்பைப் பிரித்துப் பார்த்த போது பம்பின் ஷாப்ட்டுகள் தேய்ந்தும், புஸ்கள், பேரிங்குகள், சிலீவ்கள், இம்பல்லர் அதிகம் உராய்ந்து இருந்ததும் தெரியவந்தது. இரண்டு பம்புகள் உள்ள இடத்தில் ஒன்று பழுதானதால் மற்றொன்று தொடர்ந்து இயக்க வேண்டியுள்ளது. அதிலும் எதாவது பழுது ஏற்பட்டால் நீரேற்றம் தடைபடும் ஆகையால் பழுதான பம்பை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.73000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ராஜபுரம் கழிவு நீர் நீரேற்றம் செய்யும் 5HP மோனோபிளாக் பம்பு பழுதாகி கழிவு நீர் நீரேற்றம் செய்ய முடியாமல் பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. மேற்படி பம்பை பிரித்து பார்த்ததில் பம்பில் பேரிங்குகள், புஸ்கள், மாற்றவும் , புட்வால்வு வாசர், சக்ஷன் ஹோஸ் மாற்றவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.35500/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேட்டுப்பாளையம் நகராட்சி பங்களாமேடு நீரேற்று நிலையத்தில் கே.கே.நகருக்கு நீரேற்றம் செய்யும் 30HP பம்புசெட்டுகள் மாறி மாறி இயங்கி வருகின்றன. இதில் யூனிட் எண்.II, கடந்த 29.07.2021 அன்று இயங்கிக் கொண்டிருந்த போது அதிக இரைச்சலுடன் நின்று விட்டது. பம்பை நிறுத்தி பிரித்துப் பார்த்தபோது பம்பின் புஸ்கள்,பேரிங்குகள், இம்பல்லர் தேய்ந்தும் இருந்தது. இரண்டு பம்புகள் உள்ள இடத்தில் ஒன்று பழுதானதால் மற்றொன்று தொடர்ந்து இயக்க வேண்டியுள்ளது. பழுதான பம்பை சரிசெய்து இயக்குவதற்கு ஆகும், உத்தேச செலவினம் ரூ.52000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>மணிநகர் மேல்நிலைத் தொட்டியில் இருந்து பாரிகம்பெனி செல்லும் பகுதிக்கு குடிநீர் சரிவர வருவதில்லை என்று பொதுமக்கள் புகார்கள் வருவதால் மேற்படி இடத்தில் புதிதாக இண்டர்லிங் செய்யவும் அதற்குத் தேவையான C.I.Tee மற்றும் வால்வு உதிரி சாமன்கள் வாங்கி மாற்றவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.38000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும், தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தேவையான பேக்கிங் ரோப்புகள், CID ஜாயிண்டுகள், பேரிங்குகள், புஸ்கள் மற்றும் உதிரிச் சாமன்கள் வாங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,01,500/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேற்படி செலவினம் அ,ஆ,இ,ஈ,உ அனுமதிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4,00,000/–க்கு குடிநீர் அவசியம் கருதி வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.2379/2021/இ1 |